# அரசு — புலிகள் இணக்கமின்றேல் சமாதானம் தடுமாறும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 16 இதழ் 51
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-3-1995

## பி.பி.ஸி. கூறுகிறது

(லண்டன்]
''சமாதான பேச்சுக்கான ஒரு கால வரையறை, முறையான பேச்சுப் பொருள் நிரல், குறிக்கோள்கள் பற்றியதான அறிக்கைகள் ஆகியவற்றில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் ஒரு இணக்கம் ஏற்பட்டாலன்றி தொடர்ந்து அமைதி நடவடிக்கைகள் தட்டுத்தடுமாறிக் கொண்டுதான் இருக்கும்''

வடடகுதிக்கான எரிபொருள் தடை, மீன்பிடி தடை ஆகியவற்றை அரசு நீக்குவது பற்றியதான அறிவிப்பு பற்றியும் விடுதலைப் புலிகள் விதித்தி

(2ம் பக்கம் பார்க்க[

## பூநகரி முகாமை அகற்ற முடியாது

(கொழும்பு)
பூநகரி படைமுகாமை அகற்ற படையினர் ஒரு போதும் சம்மதிக்கமாட்டார்கள் என படைத்தளபதிகள் ஜனாதிபதியிடம் உறுதிபடக் கூறியுள்ளனராம்.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் கடந்த 28ம் திகதி காலக்கெடு விதித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக கடந்த வாரம் இந்தியா

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலிருந்து

# நாடு திரும்பும் தமிழ் அகதிகளை

# புலிகளுக்கு எதிராக பயன்படுத்த ரூே திட்டம்

## - புலிகள் தலைவர்களைக் கொல்லவும் முயற்சி -

[கொழும்பு]
விடுதலைப் புலிகளுக்கு எதிராகஇயங்குவதற்கு தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளை இந்திய உளவு நிறுவனமான 'ரூே' பயன்படுத்த முயற்சிப்பதாக 'லங்காதீப' பத்திரிகையில் வெளியாகியுள்ள அரசியல் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா திரும்பியதும் 4-ம் கட்டப் பேச்சு

[கொழும்பு]
ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் விடுதலைப் புலிகளுடனான அடுத்தகட்டப்பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்று வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(2-ம் பக்கம் பார்க்க)

## ★ இனப்பிரச்னைத் தீர்வுக்காக

## அயல் நாடுகளின் உதவியை சந்திரிகா கோருகிறார்

[டாக்கா]
இலங்கையில் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் தமது முயற்சிக்கு உலக சமூகத்தின், குறிப்பாக அயல் நாடுகளின் ஆதரவு தமக்கு தேவை என ஜனாதிபதி சந்திரிகா கோரியுள்ளார்.

பங்களாதேஷிற்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் அங்குசென்ற ஜனாதிபதி சந்திரிகா பங்களாதேஷ்ஜனாதிபதி பேகம்காலிதா ஷியாவையும் ஏனைய பலரையும் சந்தித்தபோது திருமதி சந்திரிகா இந்தக்கோரிக்கையை விடுத்தார்.

(2ம் பக்கம் பார்க்க]

## பயமுறுத்தலுக்கு அரசு அடிபணியாது

சந்திரிகா கூறுகிறார்

(புதுடில்லி)
எரிபொருள் மீதான தடையை விடுதலைப புலிகளின் கோரிக்கைகாக நீக்குவதாகவும், ஆனால் சமாதானப் பேச்சுகளுக்கு முடிவுகட்டும் முயற்சியிலான பயமுறுதல்களுக்கு தமது அரசாங்கம் அடிபணிய மாட்டாதெனவும் ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் புதுடில்லியை விட்

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட மாணவரின்

# வெட்டுப்புள்ளியைக் குறைக்க மானிய ஆணைக்குழு மறுப்பு!

(கொழும்பு)
யாழ். மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளியை குறைக்குமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் விடுத்த கோரிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிராகரித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலர் டி. பி. அத்துலத் முதலி 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு தெரிவிக்கையில்;

(2ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை அங்கீகரித்தால்

## வெட்டுப்புள்ளியில் மாற்றம்

(கொழும்பு)
அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தால் பல்கலைக் கழக அனுமதிககான வெட்டுப் புள்ளிமுறையில் திருத்தம் செய்யலாம் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மாணவர்க்கான பல்கலைக் கழக அனுமதிக்கு வெட்டுப்புள்ளி அதிகரிக்கப்பட்டுள்ளது தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த வெட்டுப் புள்ளி பிரச்னை குறித்து ஜனாதிபதி சந்திரிகாவினதும் அமைச்சரவையினதும் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## வெளிநாடு செல்வதற்கு எம். பி.க்களுக்கு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)
அத்தியாவசிய காரணங்கள் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதென்றால் ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே செல்லலாம் என்று ஜனாதிபதி

(1ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கான புனரமைப்பு தற்காலிக இடைநிறுத்தம்

(கொழும்பு)
வடபகுதிக்கான புனரமைப்பு வேலைகள் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா சண்டே லீடருக்கு தெரிவித்துள்ளார்.

வடபகுதி புனரமைப்பிற்கான விசேட செயலணிக்குழுவின் தலைவரான அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் கூறுகையில்;

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatits) இரப்பை அல்சர், அஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1420)


## உதைபந்தாட்டம் புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதியதலைவராக 51 வயதான ஜோசப் செபஸ்டியன் ஆனந்தராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துக்கு தமிழர் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது. இதுவே முதல் தடவையாகும்.

கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி பேரின்பநாயகத்தை 56 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று திரு. ஆனந்தராஜா புதிய தலைவரானது குறிப்பிடத்தக்கது. - வி


## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யா / வைத்தீஸ்வராக் கல்லூரியின் வணிக மாணவ மன்றத்தினால் இன்று 30-03-95 நடைபெற இருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 31-05-95 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

- வணிக மாணவ மன்றம்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
(சி-1429)

வெளிவந்து விட்டது!

## அஷ்டலக்ஷ்மியின் அற்புத வெளியீடுகள்

ஆண்டு 5 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பயன்படககூடிய

பொது அறிவுக்களஞ்சியம்

4000 வினாவிடைகள் 180 பக்கங்கள் ரூபா 90/-

நினைத்த காரியம் கைகூட, நோய்கள் அகல வழக்குகளில் வெற்றிபெற, கண்ணொளிபெற மற்றும் பல சித்திகள் அடங்கிய சமயகுரவர் அருளிய 34 பதிகங்கள் கொண்ட

### தமிழ்வேதத்திரட்டு

120 பக்கங்கள் ரூபா 50/- சிறப்புப்பிரதி 75/-

கிடைக்குமிடங்கள்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்

சிவா அச்சகம் - கைதடி சி-1428

## உணவு வியாபார அனுமதி (லைசெனஸ்) 1995

மனித போசனைக்கு ஏதேனும் உணவு வகையைத் தயாரிப்பதற்கு, காட்சிப்படுததுவதற்கு, களஞ்சியப் படுத்துவதற்கு, விநியோகிப்பதற்கு, பதனிடுவதற்கு, பொதியிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு 1995 ஆம் ஆண்டின் 01 ஆம் எண் தமிழீழ உணவுச் சட்டத்தின் 06-ம் பிரிவின (2) ஆம் உட்பிரிவின்படி உரிமம் ஒன்றினை (லைசென்ஸ்) தமிழீழ உணவு முதன்மை அலுவலரிடமிருந்து (பொறுப்பாளர்: தமிழீழ சுகாதார சேவைகள்) பெற்று வைத்திருந்தாலனறி ஏதேனும் உணவுத் தொழிலை நடத்துதல குற்றமாகும். யாழ். குடாநாட்டில் 1995 ஆம் ஆண்டிற்கான உரிமம் கோரும் விண்ணப்பப் படிவத்தை இதுவரை ஒப்படைக்காதோர் யாழ். மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள், பிரதேச சபை உப அலுவலகங்களில் (கிராம சபைகள்) பெற்று, பூர்த்தி செய்து 10-04-1995 க்கு முன்னர் தவறாது ஒப்படைத்தல் வேண்டும். இவை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாகும். மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

—பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்,
தமிழீழம்.

1995-03-29 (ஏ-4850)


### பூநகரி முகாமை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல முன் ஜனாதிபதி சந்திரிகா முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் விவாதித்த போதே அவர்கள் இதனை உறுதிபடக் கூறியுள்ளனராம்.

படைத் தளபதிகளுடனான சந்திப்பு சுமார் 2 மணிநேரம் நடைபெற்றது. இதன்போதே ஏனைய விடயங்கள குறித்தும் ஆராயப்பட்டது, மீன் பிடித்தடையை மேலும் தளர்த்துவதற்கு கடற்படை பூரண எதிர்ப்பு வழங்கமாட்டா தெனவும் எனினும் அதனை மேலும் தளர்த்தாமல் விடுவது நல்லதெனவும் கடற்படைததளபதி அங்கு தெரிவித்திருநதாராம். சி

### வடபகுதிக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி புனரமைப்பு தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல் எதுவும் எமக்குக் கிடைக்காததால் இந்த வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வடபகுதிக்கான புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவிற்குக் காத்திருக்கிறேன்

வடபகுதி புனரமைப்பிற்காக 45 மில்லியன் ரூபாவிற்கான திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனல் ஜனாதிபதியின் உத்தரவுககாக காத்திருக்க வேண்டியுள்ளது. புனரமைப்புக்கான திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி என்னைக் கேட்டிருந்தார். அதனை தயாரித்துவிட்டேன். ஆனல் இது வரை அவர் இவ்விடயத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு கூறவில்லை. வடபகுதிக்கான முழு புனரமைப்புத் திட்டமும் மூன்று கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த மூன்று கட்ட வேலைகளும் எவ்வேளையிலும் ஆரம்பிக்கப்பட முடியும் எனவும் தெரிவித்தார். -சி

### யாழ். மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல மாவட்டங்களுக்குமான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திற்குமாத்திரம் இது அதிகரிக்கப்பட்டது எனக் கூறுவது தவறு. இந்த விடயம் குறித்து சட்ட மாஅதிபர் திணைக்களத்திலும் ஆராயப்பட்டது. நாங்கள் யாழ். மாவட்டத்திற்கான வெட்டுப் புள்ளியை குறைக்க விரும்பவில்லை. அப்படிக் குறைத்தால் அது ஏனைய மாவட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாண மாணவர்கள் பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் தமது கல்வியை தொடர்ந்தாலும் நாம் அவர்களுக்கு விசேட சலுகையை வழங்க முடியாது என கூறினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சகல பீடங்களிலும் பெருமளவு வெற்றிடங்கள் உள்ளன. இவை ஏன் நிரப்பப்படவில்லை என கேட்டபோது, இது வடபகுதி மாணவர்கள் மூலமே நிரப்ப முடியும் தமிழில் கற்கும் மாணவர்கள் மூலமே இதனை நிரப்பலம் என்றார்.

தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் யாழ், மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மாணவர்களின் எட்டுப் பிரதிநிதிகளும் தமது பிரச்னை குறித்து தீர்வு காண்பதற்கு முயற்சித்து வருகிறார்கள் தமக்கு சாதகமானபதில் கிடைக்காவிடில் தாம் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச்செல்வப்போவதில்லை எனவும் கூறியுள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பல்வேறு தரப்பிலுமிருந்து பல புகார் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## பொலிஸ் மா அதிபராக ராஜகுரு?

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபராக தற்போதுகடமையாற்றி வரும் ராஜகுரு பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படலாம் என்று, ராவய, பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வாவின் இடத்திற்கே. இவர் நியமிக்கப்பட இருக்கிறார் என்று, ராவய, மேலும் தெரிவித்துள்ளது. ம-ரி

### இனப்பிரச்னைத்

1ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு அவர், இனப்பிரச்னை தீர்வுகுறித்து விடுதலைப் புலிகளுடன் தாம் நடாத்திவரும் சமாதானப் பேச்சுக்கள் குறித்துவிளக்கிக் கூறியுள்ளதுடன் தமது இந்த முயற்சிக்கு அயல் நாடுகள் பூரண ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி சந்திரிகா மேற்குலக நாடுகளிடமும் இவ்வாறன கோரிக்கைகளை விடுத்து வந்ததும் தெரிந்ததே.

இதற்கிடையில் இந்தியாவுக்கும், பங்களாதேஷிற்கும் 6 நாள் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா இன்று நாடு திரும்புவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [சி]

### அரசு—புலிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ருந்த காலக்கெடு நீடிப்பு பற்றியும் கருத்து தெரிவித்த பி. பி. சி, நிருபர் ஜோர்ஜ் ஆர்னி இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், இன்னமும் இருக்கும் வேறுபாடுகளை தீர்க்க, ஏப்பிரல் 1-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு அரச குழுவொன்றை அனுப்புமாறு திரு. பிரபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான அண்மைக்கால கடிதப் பரிமாற்றங்களால் ஒன்று மட்டும் தெளிவாக தெரிகிறது இரு தரப்பும் பேச்சு வார்த்தை முறிந்து போவதை விரும்பவில்லை யென்பதே அது எனவும் அவர் தெரிவித்தார். (கே-சி)

### தமிழகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: நாடுதிரும்பும் அகதிகள் சிலரை தெரிவு செய்து 'றோ' இதற்காக பயிற்சி அளித்திருக்கவும் கூடும்.

பிரபாகரனைக் கைது செய்வது என்பது இலகுவான காரியமல்ல என்று இந்தியாவுக்கு நன்கு தெரியும். இந்திய விசேட அதிரடிப் படையை அனுப்பி பிரபாகரனைக் கைது செய்வது என்பது இந்தியாவுக்கு முடியாத காரியம். இந்தியப் படைகளை அனுப்பி, பிரபாகரனை கைது செய்வது என்பதும் லேசுப்பட்ட காரியமுமல்ல. ஆனபடியால் பிரபாகரனை இந்தியா பழிவாங்குவதற்கு இரண்டு வழிகளில் இறங்கியுள்ளது.

ஒன்று நீதியின் மூலம் பழிவாங்குவது. மற்றையது இந்திய உளவு ஸ்தாபனமான 'றோ' மூலம் பழிவாங்கலில் இறங்குவது. இந்த நடவடிக்கையில் 'றோ' இறங்கியிருப்பது இரகசியமானதல்ல. புலிகளின் முக்கிய பிரமுகர்களை தீர்த்துக்கட்டுவதே 'றோ' வின் செயற்பாடாக இருக்கலாம் என்றும் 'லங்காதீப' மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொல்ல 'றோ' முயலக்கூடும் எனவும் அல்லது இஸ்ரேலிய மொசாட் கமாண்டோக்களின் உதவியுடன் திரு. பிரபாகரனை உயிருடன் பிடிக்க இந்தியா முயலக்கூடுமென 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். -ம-சி

## விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிராந்திய தொலைக்கல்வி டாடநெறி ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வுகள் ஏப்பிரல் 22ந்திகதி ஆரம்பமாக இருக்கின்றன இப்பரீட்சையை முன்னிட்டு எதிர்வரும் 1ம் திகதி சனி காலை 8மணி தொடக்கம் நடைபெற இருப்பதால் அனைத்து போசனாசிரியர்களும் ஆசிரிய மாணவர்களும் தவறாது சமூகம் தருமாறு சிரேட்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். -ரி

## மீளாய்வு

[கொழும்புத்துறை]

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நிவாரண முத்திரை பெறும் குடும்பத்தினர் கிராம உத்தியோகத்தரிடமிருந்து உலர் உணவு வழங்குவது தொடர்பான மீளாய்வு படிவத்தைப் பூர்த்தி செய்து உடனடியக்க பெற்று ஒப்படைக்கும் வண்ணம் பிரதேச செயலர்தெரிவித்துள்ளார். 154

### வெளிநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யின் செயலாளர் திரு. பாலபத்த பெண்டி 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமானவிடயங்களுக்குமாத்திரம் வெளிநாடு செல்லும் எம். பிக்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அனுமதி வழங்குவார் என்றும் பாலபத்த பெண்டி மேலும் தெரிவித்தார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள், எம். பிக்கள், அரச அதிகாரிகள் எதுவித கட்டுப்பாடுமின்றி வெளிநாடுகளுக்கு சென்று வந்ததும் தெரிந்ததே. ம-சி

### சந்திரிகா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ். அரச அதிபர் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து விசேட செய்தியொன்றை எடுத்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நாலாம் கட்டப்பேச்சுக்கு அரசகுழுவை ஏப்ரல் 1ம்திகதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதும் தெரிந்ததே. [சி]

### பயமுறுத்தலுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் புறப்படும்போது நிருபர்களுக்கு கூறினர்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்: சமாதானம் நிலைநாட்டப்படுவதற்கு முன்னதாகவே வட பகுதியை புனர்நிர்மாணம் செய்ய எமது அரசு முன்வந்துள்ளது.

இந்தப் பகுதியில் மின்சார விநியோகத்தை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விடுதலைப் புலிகள் இதனை மகிழ்சியோடு ஏற்றுக் கொணடுள்ளனர். எமது அரசு பதவிக்கு வந்த சொற்ப நாட்களுக்குள் 50 பொருட்கள்மீதான தடையை நீக்கியது.

சமஷ்டி போன்ற ஒரு தீர்வு ஏற்படுமானால் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடத் தயார் என புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

வட பகுதி மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது எமது அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும் கூடுதலான அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வுகாணும் யோசனையை எமது அரசு ஏற்கனவே வகுத்துள்ளது. ஆனல் விவகாரங்கள் பற்றிய பேச்சுக்களை நடத்துவதற்கு உடன்பாடு தெரிவிப்பதற்கு முன்பதாக புலிகள் புதுப் புது நிபந்தனைகளை விதித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினர். கே-சி

யாழ்ப்பாணர் ... நூலகம்

# "தமிழர் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கம் பொ. ஐ. மு. அரசுக்கு இல்லை"

(கொழும்பு)

பொதசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அடிப்படை நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில் சிறுபான்மை மக்கள் முற்றுமுழுதாக நம்பும் ஒரு நிலையைத் தோற்றுவிப்பதாக இல்லை என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் இன்னொரு இலங்கை அரசாங்கமாக செயற்படுகிறது போலவே தோன்றுகிறது

தமிழர் பிரச்சினைக்கு நேர்மையான முறையில் தீர்வு காணவிரும்பினால வேறு விடயங்கள் குறித்து அச்சம்கொள்ளத் தேவையில்லை.

விடுதலைப் புலிகள் யுத்தத்தை மேற்கொண்டமை குறித்து தமக்கு 11 வருடகாலமாக அனுபவம் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் இலங்கை, இராணுவம் கடந்த கால அரசாங்கங்களுக்கும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளும், அவை பின்னர் தோல்வியடைந்தமைக்கான காரணங்களையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவே விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசாங்கத்தை அதன் அணுகுமுறைகளை சந்தேகத்துடன் பார்ப்பது நியாயமானதே.

விடுதலைப்புலிகள் சமாதானத்தை நாடும் அதேவேளையில் இராணுவ ரீதியில் ஏற்படும் சவாலகளுக்கும முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் விடயங்களை மிக ஆழமாக ஆராய்ந்து முடிவெடுக்கும் நிலையில் உள்ளார்கள்.

அரசியல் தீர்வினைக் காண்பதில் துணிச்சலும் நேர்மையும் இருக்குமானால் அரசு புலிகளின் இராணுவ பலத்துக்காகப் பயப்படத் தேவையில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டால் புலிகள் அதன்பின் இந்த அரசுடன் மோதுவதற்கு நியாயம் இல்லாமல் போய்விடும்.

புலிகள் அரசாங்கத்தையும் இராணுவத்தையும் அவர்கள் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவார்கள் என்று நம்பவில்லை என்றும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க-ரி

மணிவாக்கு

ஓராயிரம் திறமைசாலிகள் இறந்தால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுமோ அதைவிடப்பெரு நஷ்டம் திறமையற்ற தகுதியற்ற ஒரே ஒரு நபர் பொறுப்புமிகக உயர் பதவியில் அமர்ந்தால் ஏற்படுகிறது.

அறரோபின் அல்மாஸ்

## நமது நோக்கு

### காலக்கெடு நீடிப்பு!

"மக்களின் அன்றாட வாழ்வை ஆழமாகப் பாதித்து நிற்கும் பல பிரச்னைகள் தீர்வு காணப்படாது, பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்த காரணத்தால் நாம் அரசுக்குக் காலக்கெடுஒன்றை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம்!" எனத் தலைவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்.

அன்றாடப் பிரச்னைகள் சில சலுகைகள் தீர்க்கப் பட்டுவிட்டன என உலகிற்குக் கெட்டித்தனமாகப் பிரசாரம் செய்து கொண்டு, அழுத்தங்களைத் தொடரலாம் என்ற நினைப்புத் தெற்கிலே நிலவியது:

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்பதை உணாத்திட ஏறசனவே திக்கப்பட்ட காலக்கெடு உதவியுள்ளது.

அத்தோடு - அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் தெரிகிறது.

பொருளாதார, மீன்பிடித் தடைகளை நீக்குவோம் என்ற ஆக்கபூர்வமான கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

"முடிவுகளும் உறுதிமொழிகளும் செம்மையான முறையில் நடைமுறைப்படுத்தப்படாது போனால், அவற்றால் எவ்வித அர்த்தமும் இராது!" என்பதும் கடிதத்திற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே தான் - முடிவுகள் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த மேலும் அழுத்தம் தொடர வேண்டியுள்ளது.

அந்தவகையில் - வாக்குறுதிகள் நிறைவேற்ற மேலும் மூன்று வார காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

முன்பு - வட்ட மேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு எனப் பிரமாதப் படுத்திக் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு, தடைகளையும் அழுத்தங்களையும் தொடர்ந்ததால் கண்ட பலன் என்ன?

ஒரு பகுதி மக்கள் படும் வேதனை தொற்றுவியாதியாகி ஏனைய பகுதிகளுக்கும் பரவியதையே நாடு கண்டது.

எனவே -வாக்குறுதிகளை மாத்திரம் நம்பாது காலக்கெடு விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது விளங்கிக் கொள்ள வேண்டிய நடவடிக்கையே!

அரசின் புதிய நிலைப்பாட்டை வரவேற்பதோடு, நீதியான முறையில் விரைவாகச் செயற்பட வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

## பலதும் பத்தும்

### சம்பவாமி யுகே!! யுகே!!

"விடுதலைப் புலிகள்...... பங்குனி இதழில்......வியாசன் எழுதிய "மீண்டும் கொத்திப் பேய் சொதகு முருங்கில் ஏறுகிறது" என்ற அருமையான கவிதை பரபரப்போடு படிக்கப்பட்டு வருகிறதல்லவா? அதன் கடைசி வரி "சம்பவாமி யுகே; யுகே; என முடிகிறது அதன் கருத்து என்ன?

போர்க்காலம்......எனவே பாரதப்போர் நினைவுக்கு வர......சோர்வுடன் நின்ற அருச்சுனனுக்குக் கண்ணன் கூறிய பகவத் கீதையைப் புரட்டுகிறோம் ...!

"தர்மஸம்ஸ் தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே! யுகே!" என்கிறது கீதை. அதாவது ......யுகங்கள் தோறும் எப்போது அறம் அழிந்து மறம் மேலெழுகிறதோ அப்போது என்னை நான் பிறபித்துக்கொள்கிறேன் என்கின்றான் கண்ணன். 'அருச்சுனன்கள்' பலர் இருப்பதால் தர்மம் வெல்லும்!

— மயூரன்

## இராசி பலன்

30-03-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு பங்குனி -16)

சதுர்த்தசி மு. ப. 3-50 வரை; பூரட்டாதி மு. ப. 8-08 வரை; சித்தயோகம் அமாவாசை விரதம் இராகு காலம் பி. ப. 1-43 முதல் 3-18 வரை: சுபவேளை காலை 7-42 முதல் 9-13 வரை

மேடம்- குழப்ப நிலை, தொழில் பங்கம், விதண்டா வாதம்.

இடபம்- முதியோர் சிந்தனை. குடும்ப மகிழ்ச்சி. பயணம்.

மிதுனம்- வாக்குப்பலிதம், கடன் வசூல். தெய்வசிந்தனை.

கடகம்- மனநிலை பாதிப்பு, கெட்டசகவாசம், பணமுடை.

சிங்கம்- கண்டிப்பு, தைரியக் குறைவு. கருத்து முரண்பாடு.

கன்னி- சகோதர வருகை, கலகலப்பு, தெளிவான சிந்தனை.

துலாம்- போட்டிகளில் ஜெயித்தல், காரிய பலிதம், விருந்து.

விருச்சிகம்- முட்டி மோதல், தொழில் நஷ்டம், அலைச்சல்.

தனுசு- குறை கேட்டல், அஞ்ஞாதவாசம், முணுமுணுப்பு.

மகரம்- எதிர்பாராத சந்தோசம், சுபநிகழ்ச்சி, பண வரவு

கும்பம்- குடும்பப் பிரிவு, பெண் பகை, தனிமைப்படல்.

மீனம்- நம்பிக்கை குறைவு, மனச்சங்கடம், யோசனை.

— ஜோஸ்யர்

## சமாதானபேச்சுவார்த்தைகள் அரசியல்வாதிகள் மத்தியில் இடம்பெறவேண்டும்

### அமைச்சர் தொண்டா கருத்து

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் அரசியல்வாதிகள் மத்தியில் இடம்பெறவேண்டும். நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகளில் எந்த அரசியல்வாதியும் இடம்பெறவில்லை. அதிகாரிகள் மாத்திரம் தான் பங்குபற்றியிருக்கிறார்கள், ஆகவே இது பேச்சுவார்த்தை இல்லை. என்று அமைச்சர் தொண்டமான 'லக்பிம' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: இந்த பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக முழு நடவடிக்கைகளும் ஜனாதிபதி அலுவலகத்தில் செயறபடுத்தப்படுகிறது. எனவே இதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றார், -ம-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-03-30

வியாழன் இரவு

8-02 - சொல்லுங்கள் பார்க்கலாம்

8-10 - சித்தமருத்துவ குறிப்புகள்

8-20 - உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் "நல்ல தண்ணீரை பாதுகாக்க வேண்டும்' குறுநாடகம்

8-30 - செய்திகள்

8-40 - மொழியும் வாழ்வும்

8-50 - எங்களின் தேசம்

1995-03-31

வெள்ளி காலை

7-02 மாவீரவணக்கம்

7-15 மணியாரம்

7-30 செய்திகள்

7-35 பத்திரிகைச் செய்திகள்

7-40 - தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-03-30

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்

5-02 எழுச்சிகீதம்

5-10 புதியவை

5-15 மழலைகளுக்காக

5-30 இசையும் கதையும்

6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்

6-02 பொன்விளையும் பூமி

6-15 விளையாட்டுச் செய்திகள்

6-20 கேள்விபதில்- விளையாட்டுத் தொடர்பானவை

6-25 என் தெரிவு

6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

உயர்ந்த மரங்களை நாட்டி
உன்னத வாழ்வைப் பெறுவோம்

ஊழல் பேர் வழியை

## இராணுவ தளபதியாக நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த தேர்தல் காலத்தில் ஊழல்கள், சதிப்புரட்சிகள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் இராணுவத் தளபதியாக நியமனம் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

விரைவில் இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெறப் போகும் இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவின் இடத்துக்கு இவரை நியமிப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன என்று 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது. -ம-ரி

### சென்னை சிறுவன் சாதனை

(சென்னை)

சென்னையைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுவன் அருண் பாலாதி மிகச்சிறியவயதில் பாக்குநீரிணை கடற்பகுதியை நீந்தி சாதனை புரிந்துள்ளார்.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் வரையிலான தூரத்தை நேற்று முன்தினம் இச்சிறுவன் பத்துமணி 42நிமிடங்களில்நீந்திக் கடந்தார்.ரி

## எனது இரு பிள்ளைகளுக்கும் எனக்கும் சுதந்திரமில்லை

— ஜனாதிபதி கவலை

(கொழும்பு)

தற்பொழுது எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கிறது. எனக்கும் எனது இரண்டு பிள்ளைகளுக்கும் தான் சுதந்திரம் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர்களின் சுதந்திரம் பற்றிபேச்சுஎழுந்தபோதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

ம-ரி

### நவபுரத்தில் கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கைதடி நவபுரம் இளையவன் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மாதாந்த கலைநிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணியளவில் நவபுரம் பாடசாலையில் கழக தலைவர் எம். மதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கைதடி வட்ட அவைப் பொறுப்பாளர் வரதன் மற்றும் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். -ரி

### தவக்கால நற்சிந்தனை

"ஆண்டவரே நீர் உம் மக்கள் மீது காட்டிய கருணைக்கேற்ப எங்களை நினைவு கூரும்"

(சங். 105:1அ)

விபசாரப் பெண்ணை மன்னித்தார். தம்மை வாதித்தவர்களுக்காக பிதாவிடம் மன்னிப்பு வேண்டினார். இவை அவரின் கருணை சமுத்திரத்தை எடுத்துக் காட்டுகிறது. கருணை எவ்வளவு ஆழமாக நிறைந்துள்ளது. அவர் கருணையின் ஆழத்தை நம்மால் அளக்கமுடியுமா?

— தா. மைதிலி

# பேச்சுக்கள் தோல்வியுற்ருல் அநியாய உயிரிழப்பே மிஞ்சும்

— அமைச்சர் ஹிஸ்புல்லா

[மட்டக்களப்பு]

சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடையுமாளுல் இந்த நாட்டில் அநியாய உயிரிழப்புக்களே மிஞ்சும் என பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

இந்த நாட்டிலே இரண்டு கட்சிகள் தான் ஆட்சியமைக்கப் போகின்றன. ஒன்று ஐ. தே. க. அந்த ஆட்சிக்காலத்தில், மறைந்த ஜனுதிபதி பிரேமதாஸா விடுதலைப்புலிகளுடன் பேசினுர். அப்பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போது பொ. ச மு அரசு நடாத்தும் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தால் இனிமேல் எந்த அரசுகளும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தாது. மாருக அழிவுகளும், அநியாயமான மரணங்களும் தான் வடக்கு - கிழக்கு மண்ணில் ஏற்படும் எனவும் தெரிவித்தார், (சி)

## ★ வடக்கு-கிழக்கிற்கான நிதிப் பங்கீடு குறித்து இன்று கூட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிப்பங்கீடு தொடர்பான கூட்டம் இன்று மாலை கொழும்பில் நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு ஆளுநர் திரு. காமினி பொன்சேகா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸும் வடக்கு-கிழக்கு எம.பிக்களும் கலந்து கொள்வர்.

இக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரச அதிபர்களும் கலந்து கொள்ளவள்ளதாகவும் தெரிவிச்கப்படுகிறது. சி

# 46 ஆசிரியர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் போலிச்சான்றிதழ்கள் சமர்ப்பித்து நியமனங்கள் பெற்ற 46 ஆசிரியர்கள் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்துகல்வி அமைச்சு தற்போது தீவிரவிசாரணைகளை மேற்கொண்டுவருகிறது மேலும் இவ்வாறுன ஆசிரியர்களை கண்டுபிடிக்க விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை கொழும்பில் போலிச்சான்றிதழ்களுடன் தொழில் ஆற்றி வந்த டாக்டர்கள் பலரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இனந்தெரியாத குழுவினர் விமான உதிரிப்பாகங்களுடன் நாடாளுமன்றினுள் நுழைவு

(கொழும்பு)

சிறிய விமானமொன்றின் உதிரிப் பாகங்களுடன் ஒரு குழுவினர் நடாளுமன்ற வளாகத்தினுள் கடந்த 17-ம். 18ம் 22-ம் திகதிகளில் பிரவேசித்தார்கள் என்றும், இது நாடாளுமன்ற பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்கள் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன' லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் பொலிஸ் மா அதிபர் பிராங் டி. சில்வா, பாதுகாப்பமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியோருக்கு இது பற்றி முறையிட்டுள்ளார்கள்.

இதையடுத்து விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று நாடாளுமன்ற சபாநாயகர் கே. பி. இரத்னுயக்காவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த விவகாரத்தில் இந்தியர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் கடந்த காலங்களில் இந்த விமானத்தின் உதிரிப் பாகங்கள் ஒலிபரப்புக்காக பயன் படுத்தப் பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம - சி)

## 'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர்மீதுவழக்கு

(கொழும்பு)

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. சிங்க ரணதுங்காவுக்கு எதிராக நேற்று கொழும்பு உயர்நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஜனதிபதி சந்திரிகா சுகபோகமாக5 நட்சத்திரஹோட்டல்களில் விருநதுண்கிருர் என 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் செய்தி வெளிவந்ததற்கு எதிராகவே ஜனுதிபதி சந்திரிகா இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

திரு. சிங்க ரணசிங்க முன் ஜாமீனுக்காக 2000 ரூபாவை செலுத்துமாறு நீதிபதிநேற்று உத்தரவிட்ட்டார். சி

## நரோமா கப்பல் சேவை

[கொழும்புத்துறை]

பருத்தித் துறையிலிருந்து திருகோணமலைக்கு வழமையாகநடைபெறும், 'நரோமா' கப்பல் சேவை 13-04-1995ம் திகதி நடைபெறவுள்ளது. அன்றையதினம் புறப்படும் நரோமா கப்பலில் பயணம் செய்ய விரும்புவோர் யாழ். செயலகத்தில் இன்று 30ம் திகதி பெயர்களை பதிவுசெய்து பணம் கட்டும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கின்றுர். ]154-சி]

# 3ம், 4ம் திகதிகளில் 4-ம் கட்டப் பேச்சு?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான நாலாம் கட்ட பேச்சு வார்த்தைகள் அடுத்த மாதம் 3ம் 4ம் திகதிகளில் இடம்பெறக்கூடும் என்று 'திவயின' பத்திரிகை, செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் பங்கு பற்றக்கூடும் என்றும் 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது,

இப் பேச்சுவார்த்தைக்காக ஏப்ரல் 1ம் திகதி அரசகுழுவை யாழ்ப்பாணம் அனுப்புமாறு திரு, பிரபாகரன் ஜனுதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதும் தெரிந்ததே. ம-சி

## பரீட்சை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

க. பொ த. (உ/த- 1995 பரீட்சைக்கான பூரணப் படுத்திய விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு இதுவரை அனுப்பாத பாடசாலைகள் இவற்றை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்காக நாளை 31ம் திகதிக்கு முன் வலயம் 1 கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றுர். சி

# 4ம் கட்டபேச்சுபற்றி எதுவும் தெரியாது

— ராஜன் ஆசீர்வாதம்

(கொழும்பு)

''நாலாவது சுற்று பேச்சுவார்த்தை குறித்து ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்க எதுவும் தெரிவிக்கவில்லை. தற்போது என்ன நிலையில் அவை உள்ளன என்பது பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது.''

யாழ்பாணத்தில், அரசு பிரதிநிதியாக புலிகளுடனுன பேச்சில் கலந்துகொண்ட திரு. ராஜன் ஆசீர்வாதம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: சமாதான முயற்சி பின் தள்ளப்படுவதனையிட்டு சிங்கள மக்கள் கவலை கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த ஆவலாக உள்ளனர்.

என்னைப் பொறுத்தளவில் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டுள்ளேன். யார்இதனை ஊக்கமளிக்கிருர் என்பதிலும் பார்க்க நிரந்தர சமாதானமே நாட்டுக்கு தேவை என்றும் மேலும் கூறினுர். கே சி

## கூட்டம் பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள்தொடர்பாக யாழ், செயலகத்தில் நாளை 31ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு நடைபெற இருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினுல் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் அடுத்த மாதம் 07ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வுக்கு கஷ்டப் பிரதேச ஆசிரியருக்கு முன்னுரிமை

(கொழும்பு)

ஆசிரிய சேவையில் பதவி உயர்வுக்கு இனிமேல் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன தெரிவித்ததாக லங்கா தீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்பொழுது கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் 3500 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுப்பதற்கே. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிச்கப்படுகிறது.

தற்பொழுது 1 லட்சத்து 85 ஆயிரம் ஆசிரியர்களில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் எந்தக்காலத்திலும் கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்ருதவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது -ம-சி

## முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு2ம்திகதி நடைபெறும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின வருடாந்த மாநாடு திர் வரும் 2-ம் திகதி கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு னுப்பப்பட்டுள்ளதாக தெரிவிககப்பட்டது. -இ

யாழ்ப்பாணத்தில்

## ஏப்ரில் 15வரைவெப்பநிலை உயர்வாகவே இருக்கும்

(யாழ்ப்பாணம்)

இந்த மாதத்தின் ஆகக் கூடிய வெப்பநிலை கடந்த ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் வடக்கு-கிழக்கு பகுதியில் நிலவியது.

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை வெப்பநிலை 34.1 பாகை செல்சியஸ் எதிர் வரும் ஏப்பிரல் 15 வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும் என தெரிவிக்கப் படுகிறது.

மார்ச, ஏப்ரல் மாத காலத்தில் சராசரியாக 28 பாகை செல்சியஸ் வெப்பநிலை யாழ்ப்பாணத்தில் நிலவுவது குறிப்பிடத்தக்கது. -கே-ரி

## வடக்கு-கிழக்கு நிலைமையை ஆராய பிரிட்டிஷ் எம். பி.க்கள் கொழும்பு வருகை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்னைகள் தொடர்பான நிலைமையை நேரில் ஆராய்வதற்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று விரைவில் கொழும்புக்கு வரவுள்ளது.

இலங்கை இனப்பிரச்னை தீர்வு முயற்சிகளை மேற்கத்தைய நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற ஒன்றிய மாநாட்டில் பங்குபற்ற லண்டன் சென்றுவிட்டு நாடுதிரும்பிய நாடாளுமன்ற குழுக்களின் பிரதிதலைவர் ரவ் அக்மியிடம் பிரிட்டிஷ் எம். பி.க்களின் இலங்கை விஜயம்பற்றி கேட்டபோது அவர் அதனை ஏற்றுக்கொண்டார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ரி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B